முருகப்பெருமான் துணை

**மகான் எறிபத்த நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.09.2023,** புதன்கிழமை

1. யோகராசனே தரும வள்ளலே
உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
யோகநெறி காட்டும் ஞானியே
உலகத்தில் அரங்கனுன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது தரிவை திங்கள்
குறையிலா தசதிகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 10 ம் நாள், 27.09.2023, புதன்கிழமை)
அறிவுரை ஆசிதனை எறிபத்த நாயனார் யானும்
அகிலமே மேன்மைபெற உரைப்பேன்
3. உரைக்கவே பசிபிணி கொடுமையை
உலகை விட்டு விரட்டவே
அறத்தினை அன்னதான சேவையாக
அகிலமெங்கும் கிளைகள் துவக்கி
4. துவக்கி ஏழ்மையை விரட்டி
துரிதகதி மார்க்கம் வளர வேண்டி
அவனியில் கிளைகள் அனைத்திலும்
அரங்கா முருகா எனும் செபதபம்
5. செபதபம் எங்கும் முழங்கிட
சேவை விரிவுபட செய்து கொண்டு
அபயமென அரங்கன் திருவடிபற்றி
அன்னதான சேவையில் கலந்து
6. கலந்துமே உடல் உழைப்பும்
கருணைபட பொருளுதவியும் செய்து
பலம்தரும் அரங்கன் கரம்பட
பழுதில்லா தீட்சைதனை ஏற்று

7. ஏற்றுமே அரங்க மகானின்
இணையிலா சீடர்களென
ஆற்றல்பட அடையாளம் காட்டி
அகிலத்தில் அரங்கன் புகழ்பாடி
8. புகழ்பாடி சைவநெறி பிறழா
புண்ணிய வழிகளைதொடர
வகையிலா தீவினைகள் விலகி
வரமாக ஞானசித்தர்கள் ஆசிபட
9. ஆசிபட சாமானியர்கள் தனக்கும்
அரங்கன் அவதாரம் புரியவே
வாசியோக மகா சூட்சுமம்
வந்து சிறக்கும் ஞானவாழ்வாக
10. ஆகவே மாற்றம் தேறி
அனைவரும் ஞானிகளாவர்
செகமெங்கும் ஞானசேவை
சேவையாக தருமமாக நிரம்பி
11. நிரம்பியே ஞானிகள் ஆட்சி
நீதி குன்றா தரும ஆட்சியாக
அருந்தவசி அரங்கனால் அரங்கேறும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—